ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் சாதாரண துரும்பை தூணாக்கி மாணவர்களிடையே ஒரு கொந்தளிப்பான உணர்ச்சியை ஏற்படுத்தி விட வேண்டாம் என்று வெளியில் உள்ள பத்திரிகைகளைக் கூட இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட நாம் இடம் தரவேண்டாமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, இங்கே ஹௌஸ் சர்ஜன்களாக உள்ளவர்கள் ஓரிரு நாட்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபடக் காரணம் மத்திய அரசின் பொறுப்பில் பணியாற்றுகிற, டெல்லியில் உள்ள ஜூனியர் டாக்டர்களுக்கு அவர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தரும் வகையில், அனுதாபம் தெரிவிப்பது என்ற முறையில் சென்னை பொது மருத்துவ மனையில் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். உண்மையில் அனுதாபம் தெரிவிக்கிற ஒரு நல்ல தீர்மானம் போதுமானதாகும். பங்களூரில் உள்ள டாக்டர்கள் ஏதோ ஒன்றரை அல்லது ஒரு மணி நேரம் வேலைநிறுத்தம் செய்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நோயாளிகளுக்குத் தெரிவிக்கிற அனுதாபம் டாக்டர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அனுதாபத்தைவிட முக்கியமானது என்பதை அறிந்து வேலை நிறுத்தங்களை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று தலைவர் அவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(3) அறிவிப்பு.

நாட்டு விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு மரியாதை செய்ய மவுன அஞ்சலி செலுத்த பேரவை ஒத்திவைக்கப் படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இன்று காலை 11-00 மணி முதல் 11-02 மணிவரை மவுன அஞ்சலி செலுத்தப்படும். சென்னை, கோட்டையிலுள்ள தலைமைச் செயலகத்தின் மேற்குப்புறத்தில் உள்ள இராணுவ அணிவகுப்புத்

திடலில் நடைபெறும் அந்நிகழ்ச்சியில் ஆளுநர் அவர்களும், அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள் வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு 11-30 மணிக்கு மறுபடியும் கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் காலை, 11-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ஜேம்ஸ், திரு. எட்மண்ட் ஆகியோர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(4) கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் வயிற்றுக்கடுப்பும், காலராவும் ஏற்பட்டுள்ளதும் அதைத் தடுப்பதன் அவசியம் குறித்தும்.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I call the attention of the Hon. the Minister for Health to a matter of urgent public importance, namely the outbreak of cholera and serious type of Dysentry in the districts of Kanyakumari, Tirunelveli and Tiruchirappalli, during the last few months and the necessity to take immediate steps to prevent the same.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முனிச்சிறை மற்றும் மேல்புரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் வயிற்றுக்கடுப்பு மற்றும் குடற்காய்ச்சல் ஆகிய இரண்டு நோய்கள் 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு திருவெட்டாறு, தக்கலை மற்றும் குருந்தங்கோடு வட்டாரங்களில் (Blocks) வயிற்றுக் கடுப்பு நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் 33 ஊர்கள் பாதிக்கப்பட்டன. தோவாளைத் தாலுக்கா முக்கியமாக பாதிக்கப்பட்டது.